செ.வெ.எண்: 45 நாள்: 19.11.2021

**நாகப்பட்டினம் மாவட்டத்தில் 01.01.2022-ஐ தகுதி நாளாக கொண்டு 18 வயது நிரம்பியவர்களும், வாக்காளர் பட்டியலில் இதுவரையில் பெயர் இடம்பெறாத / சேர்க்கப்படாத வாக்காளர்கள் பெயர் சேர்த்திட ஒரு அரிய வாய்ப்பு என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

நாகப்பட்டினம் மாவட்டத்தில் சிறப்பு சுருக்கத்திருத்தம் 2022ஐ முன்னிட்டு வரைவு வாக்காளர் பட்டியல் கடந்த 01.11.2021 அன்று நாகப்பட்டினம் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்களால் வெளியிடப்பட்டது. அதனையடுத்து 2022 ஜனவரி 1-ஆம் தேதியை தகுதி நாளாக கொண்டு அன்றோ அல்லது அதற்கு முன்பாகவோ 18 வயது நிரம்பியவர்கள் தங்களது பெயரை வாக்காளர் பட்டியலில் சேர்த்தல், நீக்கம், திருத்தம் மற்றும் முகவரி மாற்றத்திற்கான சிறப்பு முகாம்கள் அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் 13.11.2021, 14.11.2021. 27.11.2021 மற்றும் 28.11.2021 ஆகிய நாட்களில் நடைபெறும் என தேர்தல் ஆணையம் அறிவித்திருந்தது. அதன்படி, கடந்த 13.11.2021 மற்றும் 14.11.2021 ஆகிய இரண்டு தினங்கள் நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள 03 சட்டமன்ற தொகுதிகளுக்கான 314 வாக்குச்சாவடி மையங்களில் சிறப்பு முகாம்கள் நடத்தப்பட்டு அதில் படிவம் 6ன் மூலம் 3,868 வாக்காளர்கள் தங்களது பெயரை வாக்காளர் பட்டியலில் சேர்க்க விண்ணப்பித்துள்ளனர். தற்போது, கூடுதலாக 20.11.2021 மற்றும் 21.11.2021 ஆகிய இரண்டு தினங்கள் அந்தந்த வாக்குச்சாவடி மையங்களில் சிறப்பு முகாம்கள் நடத்திடுமாறு தேர்தல் ஆணையத்தின் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, பொதுமக்கள் சிறப்பு முகாம்கள் நடைபெறும் 20.11.2021. 21.11.2021, 27.11.2021 மற்றும் 28.11.2021 ஆகிய நாட்களில் காலை 09.30 மணி முதல் மாலை 05.30 மணி வரையிலும், மற்ற நாட்களில் வருவாய் வட்டாட்சியர் அலுவலகங்களில் காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரையிலும் பூர்த்தி செய்த படிவங்களை வழங்கலாம். இந்த அரிய வாய்ப்பினை பொதுமக்கள் பயன்படுத்திகொள்ளுமாறு நாகப்பட்டினம் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**